# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### இலங்கை சிவில் சேவை அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி பயிற்சிகள் குறித்த NCGG – SLIDA புரிந்துணர்வு உடன்படிக்கையின் அமுலாக்கத்துக்கான முறைமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன

இலங்கை ஜனாதிபதி அதி மேதகு அநுர குமார திசாநாயக்க அவர்கள் இந்தியாவுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோக பூர்வ விஜயத்தின்போது இந்தியாவில் உள்ள நல்லாட்சிக்கான தேசிய மையம் NCGG மற்றும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று 2024 டிசம்பர் 16 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையின் 1500 சிவில் சேவை அதிகாரிகளுக்கு இந்தியாவில் ஐந்து வருட காலப்பகுதியில் பயிற்சிகள் மற்றும் ஆளுமை விருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

2. இந்நிலையில் குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கையினை வினைத்திறன் மிக்க வகையில் அமுல்படுத்துவதற்கான நடைமுறைகளை தீர்மானிக்கும் முகமாக, இலங்கையின் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் அழைப்பின் பேரில் NCGG பணிப்பாளர் நாயகம் டாக்டர் சுரேந்திரகுமார் பாக்தே அவர்கள் தலைமையிலான NCGG அதிகாரிகள் 2025 பெப்ரவரி 17 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இலங்கைக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். NCGG இணைப் பேராசிரியர் டாக்டர் அஷுதோஷ் பால் சிங் அவர்களும் இந்த அதிகாரிகள் குழாமில் அங்கம் வகித்திருந்தார்.

3. குறித்த பேராளர்கள் இலங்கை பிரதமர் மாண்புமிகு டாக்டர் ஹரிணி அமரசூரிய, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கௌரவ டாக்டர் A.H.M.H. அபயரத்ன ஆகியோரைச் சந்தித்த அதேவேளை இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் N.S. குமநாயக்கே, இலங்கை பிரதமரின் செயலாளர் திரு ஜி.பி. சபுதந்ரி மற்றும் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு எஸ் அலோக பண்டார ஆகியோருடனும் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தனர். மேலும் கண்டி மாவட்ட செயலகத்திற்கு விஜயம் செய்திருந்த குறித்த பேராளர்கள் மத்திய மற்றும் வட மேல் மாகாணத்தைச் சேர்ந்த NCGG பயிற்சிபெற்ற அதிகாரிகளையும் சந்தித்திருந்தனர்.

4. இந்நிலையில் SLIDA-வில் நடைபெற்ற தொழில்நுட்ப அமர்வுகளில், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து தீர்மானிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் வருடந்தோறும் 8 தொகுதிகளாக இப்பயிற்சிகளை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட முன்னுரிமைகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளைக் கவனத்தில்கொண்டு, NCGG ஆல் வடிவமைக்கப்பட்ட இப்பயிற்சி நெறிகள், குறிப்பாக இ-ஆட்சி, காணிப்பதிவுகளை டிஜிட்டல் மயமாக்கல், அரசின் இ-சந்தை வசதிகள் போன்றவை உள்ளடங்கலாக ஆட்சியில்

டிஜிட்டல் முறைமைகள், பொதுமக்கள் போக்குவரத்து முகாமைத்துவம், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் சுய உதவி குழு திட்டங்கள், விவசாயத்துறை, மீன்பிடி, மற்றும் காடுகளை உருவாக்கல் ஆகியவற்றில் சிறந்த செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல், பொது தனியார் பங்குடைமை, மக்களை மையமாகக் கொண்ட சேவை விநியோக முறைமைகள், ஸ்திரமான அபிவிருத்தி இலக்குகளை அமுல்படுத்துதல் உள்ளிட்ட ஏனைய பல விடயங்களை உள்ளடக்கியதான கருப்பொருளைக் கொண்டிருக்குமென இணங்கப்பட்டது.

5. இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கையின் 40 சிவில் சேவை அதிகாரிகளுக்கான முதல் பயிற்சி நெறி விரைவில் நடைபெறவுள்ளது. புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த பேச்சுகள் தொடர்ந்த நிலையில்கூட , 200க்கும் மேற்பட்ட இலங்கை சிவில் சேவை அதிகாரிகள் ஏற்கனவே NCGG-யில் ஆளுமை மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக பயிற்சிகளைப் பெற்றிருந்தனர்.

*********************

**கொழும்பு**
**20 பெப்ரவரி 2025**